# பேராதனைப் பல்கலைக்கழகம்

## தொடர் தொலைக் கல்வி நிலையம்

### கலைமாணி முதலாம் வருட (100 மட்ட) பரீட்சை - (வெளிவாரி புதிய பாடத்திட்டம்)
### ஆகஸ்ட் - 2018
### மானிடப் புவியியல் (GGYE 101)

**அறிவுறுத்தல்கள்:** **முதலாம் (01)** வினா கட்டாயமானது. மேலும் மூன்று வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக **நான்கு (04)** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்தில் மொத்தமாக **எட்டு (08)** வினாக்கள் உள்ளன. உலக புறஉருவப்படங்கள் இரண்டு வழங்கப்படும். கையடக்கத் தொலைபேசியில் உள்ள கணிப்பான்கள் பாவிக்க அனுமதிக்கப்படமாட்டாது.

**காலம்: மூன்று மணித்தியாலங்கள்**

---

(01) வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தில் பின்வருவனவற்றை குறித்து பெயரிட்டுக் காட்டுக. (2 ½ x 10 = 25 புள்ளிகள்)

(அ) ஜேர்மன் மற்றும் ஆர்ஜன்டீனா.

(ஆ) ரியோடி ஜெனிரோ நகரம் மற்றும் ரோம் நகரம்.

(இ) இந்துநதிப் பள்ளத்தாக்கு.

(ஈ) அடிக்கடி சுனாமி (Tsunami) ஏற்படும் இரண்டு கரையோரப் பிரதேசங்கள்.

(உ) மக்கா மற்றும் லும்பினி.

(ஊ) குடியேற்ற நாடுகளை தம்வசப்படுத்தி வைத்திருந்த ஐரோப்பிய நாடுகள் நான்கு.

(எ) புதிய கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகள் இரண்டு.

(ஏ) தேயிலைப் பயிர்செய்கையை மேற்கொள்ளும் இரண்டு நாடுகள்.

(ஐ) உயர்தர மானிட அபிவிருத்திக் குறிகாட்டிகளை கொண்டுள்ள இரண்டு நாடுகள்.

(ஒ) ஒரு பூகோள நகரம்.

(02) "மானிடப் புவியியலின் மனித - சூழல் அணுகுமுறையானது உலகிற்கு சிறந்த எதிர்காலமொன்றினை உருவாக்க பங்களிக்க முடியும்". இக்கூற்றினைப் பற்றி கருத்துரைக்க. (25 புள்ளிகள்)

(03) (அ) மானிட இடப்பெயர்வு தொடர்பாக நீர் விளங்கிக் கொள்வது என்ன? (05 புள்ளிகள்)

(ஆ) கடந்த கால உலகக் குடிப்பெயர்வுப் பாங்கினை தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வரைந்து காட்டுக. (05 புள்ளிகள்)

(இ) ஆசிய நாடுகளை விசேட கவனத்தில் கொண்டு சமகால இடப்பெயர்வுப் பாங்கினை விளக்குக. (15 புள்ளிகள்)

(04) (அ) உலகமயமாதலின் (globalization) பிரதான வடிவங்கள் நான்கினைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) உலகமயமாதலின் 'உயர்ந்த நம்பிக்கை' (hyper globalist) மற்றும் 'உலகமயமாதலின் நம்பிக்கையீனம்' (skeptical globalist) என்ற எண்ணக்கருக்களை எவ்வாறு நீர் விளங்கிக் கொள்கின்றீர் என்பது பற்றி சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(இ) உலகமயமாதல் செயன்முறையில் சமநிலையிலானதொரு பங்குதாரராக மாற்றம் அடைவதற்கு இலங்கையில் கட்டமைப்பு மாற்றங்கள் ஏதேனும் தேவைப்படுமா? பொருத்தமான உதாரணங்களுடன் விவரிக்குக. (15 புள்ளிகள்)

(05) (அ) குடித்தொகையானது ஒரு சில இடங்களில் அடர்த்திக் குறைவாக காணப்படுவதற்கான பௌதிகக் காரணிகளை விளக்குக? (10 புள்ளிகள்)

(ஆ) தற்கால உலகில் குடித்தொகையுடனான விடயங்கள் எவ்வாறு சூழலியல் பிரச்சினைகளில் தலையீடு செலுத்துகின்றன என்பதனை விமர்சனரீதியாக மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

(06) இலங்கையின் குடித்தொகை எதிர்வுகூறல்களின்படி வயது முதிர்ந்தோர்களின் எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் மொத்த குடித்தொகையில் 25 வீதமாக காணப்படும். எதிர்காலத்தில் வயது முதிர்ந்தோர்களின் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான அபிவிருத்தி சார்ந்த உங்களது ஆலோசனைகளை முன்வைக்குக. (25 புள்ளிகள்)

(07) (அ) நகரங்களை வரையறை செய்வதற்கு பயன்படுத்தப்படும் நான்கு அளவீடுகளைப் பெயரிடுக. (05 புள்ளிகள்)

(ஆ) மேலே குறிப்பிட்ட ஏதேனும் ஒரு அளவீட்டினை தெரிவு செய்து நகரப் பகுதிகளை வரையறை செய்வதற்கு அதன் பயன்பாட்டினை பொருத்தமான உதாரணங்களுடன் விமர்சன ரீதியாக மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

(இ) உலக நகரமயமாக்கலின் அண்மைக்கால பாங்குகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

(08) பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** (02) சிறுகுறிப்பு எழுதுக. (12.5 X 2 = 25 புள்ளிகள்)

(அ) நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி எண்ணக்கரு

(ஆ) புதுப்பிக்க முடியாத வளங்கள்

(இ) அபிவிருத்தியானது சுதந்திரமானதாக (Development as freedom).

(ஈ) புவியியலில் பிரதேச எண்ணக்கரு